**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.01/2018** P.W. 18

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | : மரு. திருமதி சுபா | Father's Name . | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 11.08.2022 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 11.08.2022

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது சென்னை மருத்துவகல்லூ மருத்துவமனையில் மனநல மருத்துவருக்கான பட்ட மேற்படிப்பு படித்துவருகிறேன். 03.04.2017 ம் தேதி நாகப்படடினம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது சிபிசிஐடி காவல் நிலைய கு.எண்.2/2014 வழக்கில் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்று டிஎன்ஏ பரிசோதனைக்காக சுகன்யா என்பவரையும் அவரது குழந்தை 1-3/4 வயது குழந்தையையும் டிஎன்ஏ பரிசோதனைக்கு உட்படுத்தி இரத்த மாதிரிகளை தனித்தனியாக பிளட் கார்டுகளில் போட்டு அதை முத்திரையிடப்பட்ட கவரில் வைத்து பெண் காவலர் 908 சாவித்ரி என்பவரிடம் ஒப்படைத்தேன். அது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் நடந்த விபரத்தை சொன்னேன்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

நான் பரிசோதனைக்கு உட்படுத்திய நபர் என்னிடம் சாதாரணமாகத்தான் பரிசோதனையின்போது பதில் அளித்தார். இரத்த மாதிரிகளை எடுப்பதற்கு சுகன்யா அனுமதி அளித்தபிறகுதான் இரத்த மாதிரிகளை சேகரித்தேன். மேற்சொன்னபடி அனுமதி அளித்த விபரத்தை போலிசார் விசாரணையிலும் சொன்னேன். அவரது மைனர் குழந்தைக்கும் இரத்த மாதிரிகளை

பரிசோதனைக்கு எடுத்த விபரத்தை சொன்னேன். நான் பரிசோதனை செய்த நபர்தான் சுகன்யா என்பதற்கும் அவரது குழந்தை சோபியா என்பதற்கும் அவர்கள் எந்த ஆதாரமும் தாக்கல் செய்தார்களா என்றால் நீதிமன்ற கடிதத்தின் பேரில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டிய நபர்களை போலிசார் அடையாளம் காட்டினார்கள் அந்த விபரத்தை நான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன். இரத்த மாதிரிகளை சேகரித்தபோது அந்த பிளட் கார்டில் எதற்காக சேகரிக்கப்பட்டிருக்கும் என்ற விபரம் எழுதப்பட்டிருக்கும் அந் விபரத்தை போலிசார் விசாரணையிலும் சொன்னேன்.

என்னை காவல் உதவி ஆய்வாளர் விசாரித்தார்கள் என்றால் சரிதான். என்னை விசாரித்தபோது வாக்குமூலத்தில் கையெழுத்துப்போட்டேனா என்று எனக்கு நினைவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**